Daily Thanthi
Dated: 23.02.2024

### நாடாளுமன்ற தேர்தல் ஏற்பாடுகள் தீவிரம்:

# இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் சென்னையில் இன்று ஆலோசனை

## அரசியல் கட்சியினர், உயர் அதிகாரிகளை சந்திக்கிறார்

சென்னை, பிப்.23-

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் ஏற்பாடுகள் குறித்து இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமார் சென்னையில் இன்று ஆலோசனை நடத்துகிறார்.

### நாடாளுமன்ற தேர்தல்

நாடாளுமன்ற தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. தமிழ்நாட்டில் இந்த தேர்தலை நடத்துவதற்கான முன்னேற்பாட்டு பணிகளை தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு மேற்கொண்டு வருகிறார். இந்த நிலையில் கடந்த 6 மற்றும் 7-ந்தேதிகளில் இந்திய துணை தேர்தல் கமிஷனர் அஜய் பாது மற்றும் இந்தியதேர்தல்கமிஷனின் முதன்மை செயலாளர் மலேய் மாலிக் ஆகியோர் சென்னைக்கு வந்தனர்.

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் ஏற்பாடுகள் மற்றும் தயார் நிலை குறித்து ஆய்வுகள் மேற்கொண்டனர். அந்த ஆய்வுக்கூட்டத்தில், வருமான வரி துறை, வருவாய் புலனாய்வு துறை, சுங்கத் துறை, அமலாக்கத் துறை, சி.ஆர்.பி.எப்., ஆர்.பி.எப்., சி.ஐ.எஸ்.எப்., ஜி.எஸ்.டி. போன்ற அமலாக்க முகமைகளின் அதிகாரிகள் மற்றும் தமிழகபோலீஸ் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டனர்.பின்னர் தமிழகத்தின் அனைத்து மாவட்ட கலெக்டர்கள், தேர்தல் நடத்தும் அதிகாரிகள், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகள், போலீஸ் கமிஷனர்களுடன் காணொலிக்காட்சி மூலம் ஆலோசனை மேற்கொண்டனர்.

### தலைமை தேர்தல் கமிஷனர் வருகை

நாடாளுமன்ற தேர்தல் நடைபெறுவதற்கு முன்பு ஒவ்வொரு மாநிலத்திற்கும் இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் நேரடியாக சென்று ஆய்வு மேற்கொள்வது வழக்கமாக உள்ளது.

அந்த வகையில் இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமார் நேற்று இரவு விமானம் மூலம் சென்னைக்கு வந்தார். அவருடன் தேர்தல் கமிஷனர் அருண் கோயல், மூத்த துணை தேர்தல் கமிஷனர்கள் தர்மேந்திர சர்மா, நிதிஷ் வியாஸ், துணை தேர்தல் கமிஷனர்கள் அஜய்பாது, மனோஜ்குமார் சாகு, முதன்மை செயலாளர் மலேய் மாலிக் மற்றும் உயர் அதிகாரிகள் நாராயணன், அனுஜ் சந்தக் ஆகியோரும் வந்தனர்.



ராஜீவ்குமார்

சென்னை விமான நிலையத்திற்கு எதிரே உள்ள நட்சத்திர ஓட்டலில் இன்று காலை 11.30 மணிக்கு ஆய்வுக் கூட்டம் தொடங்குகிறது. முதலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் ராஜீவ்குமார் ஆலோசனை மேற்கொள்கிறார். அப்போது ஒவ்வொரு கட்சி பிரதிநிதிகளையும் தனித்தனியாக சந்தித்து பேசுவார்கள். இந்த கூட்டம் பிற்பகல் 1 மணி வரை நடைபெறும். மதிய உணவுநேரம் முடிந்ததும் பிற்பகல் 2 மணிக்கு மாவட்ட கலெக்டர்கள், போலீஸ் சூப்பிரண்டுகள் ஆகியோருடன் ஆலோசனை மேற்கொள்வார்கள்.

இந்த கூட்டத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்தல் ஏற்பாடுகள் எந்த அளவில் தயார் நிலையில் உள்ளன என்பதை தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமார் ஆய்வு செய்வார். இந்த கூட்டம் இரவு 8 மணி வரை நீடிக்கும்.

### 3 மாநில அதிகாரிகளுடன் ஆலோசனை

தொடர்ந்து நாளை (சனிக்கிழமை) காலை 9 மணிக்கு மீண்டும் கூட்டம் தொடங்கும். இந்த கூட்டத்தில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் தங்களின் மாநிலங்களில் உள்ள தேர்தல் ஏற்பாடுகள், தயார் நிலை, முன்னெச்சரிக்கை, சட்டம் ஒழுங்கு ஆகியவை பற்றிய படக்காட்சி விளக்கத்தை தலைமை தேர்தல் கமிஷனரிடம் அளிப்பார்கள். இந்த கூட்டம் காலை 11 மணி வரை நடைபெறும்.

அதன் பின்னர் காலை 11 மணியில் இருந்து பிற்பகல் 1 மணிவரை வருமான வரி துறை, வருவாய் புலனாய்வு துறை, சுங்கத் துறை, அமலாக்கத்துறை, சி.ஆர்.பி.எப்., ஆர்.பி.எப்., சி.ஐ.எஸ்.எப்., ஜி.எஸ்.டி. போன்ற அமலாக்க முகமைகளின் அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டத்தை தலைமை தேர்தல் கமிஷனர் மேற்கொள்வார்.

அதைத்தொடர்ந்து பிற்பகல் 2 மணியில் இருந்து 3 மணி வரை தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, போலீஸ் டி.ஜி.பி. சங்கர் ஜிவால் ஆகியோருடன் தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமார் ஆலோசனை மேற்கொள்வார்.

அதன் பின்னர் பிற்பகல் 3 மணி முதல் 3.30 மணி வரை பத்திரிகையாளர்களுக்கு ராஜீவ்குமார் பேட்டி அளிப்பார். அப்போது நாடாளுமன்ற தேர்தலை தமிழகத்தில் நடத்துவதற்கான முன்னேற்பாடுகள், மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றி எடுத்துரைப்பார். அதன் பின்னர் ராஜீவ்குமார் உள்ளிட்ட தேர்தல் அதிகாரிகள் சென்னை விமான நிலையத்தில் இருந்து டெல்லி புறப்பட்டு செல்வார்கள்.

Visit of high level dignitaries from Hon'ble Election Commission of India to review the poll preparedness of General Election to Lok Sabha 2024 in Tamil Nadu

The Hindu (Tamil)
Date: 23.02.2024

## சென்னையில் இன்றும், நாளையும்

# தலைமை தேர்தல் ஆணையர் ஆலோசனை

● சென்னை

மக்களவை தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்து அரசியல் கட்சிகள், மாவட்ட ஆட்சியர்கள், காவல் துறை அதிகாரிகள் உள்ளிட்டோருடன் தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் தலைமையிலான குழுவினர் இன்றும், நாளையும் ஆலோசனை நடத்துகின்றனர்.

மக்களவை தேர்தலுக்கான அறிவிப்பு மார்ச் 2-வது வாரம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தலுக்கான ஆயத்த பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

இந்த சூழலில், இந்திய தேர்தல் ஆணையத்தின் தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் தலைமையில் தேர்தல் ஆணையர்கள், ஆணைய அதிகாரிகள் குழுவினர் நேற்று இரவு சென்னை வந்தனர். தமிழகத்தில் தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து அவர்கள் இன்றும், நாளையும் ஆய்வு செய்கின்றனர்.

சென்னைகிண்டியில்உள்ள ஓட்டலில் இன்று காலை 11.30 முதல் பிற்பகல் 1 மணி வரை, அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தி, அவர்களது பரிந்துரைகள், கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பெறுகின்றனர்.

பிற்பகல் 2 மணி முதல் இரவு 8 மணி வரை மாநில தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூ முன்னிலையில், மாவட்ட தேர்தல் அதிகாரிகளான சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் இதர மாவட்ட ஆட்சியர்கள், காவல் துறை அதிகாரிகள், காவல் ஆணையர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் நேரடியாகவும், காணொலியிலும் ஆலோசனை நடத்தி, உரிய அறிவுறுத்தல்களை வழங்குகின்றனர்.

நாளை (பிப்.24) காலை 9 முதல் 11 மணி வரை தமிழகம், கர்நாடகா, கேரளா மாநில தலைமைதேர்தல் அதிகாரிகள், காவல் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துகின்றனர்.

அப்போது, தேர்தல் அதிகாரிகள், காவல் அதிகாரிகள் தங்கள் மாநிலங்களில் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து தெரிவிக்கின்றனர்.

பின்னர், வருமான வரி, வருவாய் புலனாய்வு, போதை பொருள் தடுப்பு, சுங்கத்துறை, ரயில்வே பாதுகாப்பு படை, மத்திய ரிசர்வ் படை, மத்திய தொழில் பாதுகாப்பு படை உள்ளிட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துகின்றனர். பிறகு, தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, டிஜிபி சங்கர் ஜிவால் ஆகியோருடன் ஆலோசனை நடத்திவிட்டு, செய்தியாளர்களை சந்திக்கின்றனர். மாலை டெல்லி திரும்புகின்றனர்.

Visit of High level dignitaries from Hon'ble Election commission of India to review the poll preparedness of General Election to lok Sabha 2024 in Tamil Nadu.